ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ [illegible] ॥

அல்லது

ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசார் செய்த

# பிறர் நூல் பொருள் கொள்ளல்.

இது

சின்னமூ, ர. ஸ்ரீநிவாஸபாட்டாசாரியரால்

எழுதப்பட்டது.

ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தில்

வெளியிடப்பட்டது.

வி[illegible] 1932 அணா 2

OFFICE OF THE ... No. 17 NOV 1932

727

Q2
N32
170039

17 NOV 1932

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ।

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியார் செய்த

# பிறர் நூல் பொருள் கொள்ளல்.

நாம் சென்ற வருஷம் "ஸ்ரீ அண்ணங்கராசாரியாரின் உண்மை ஸ்வரூபம்" என்ற ஓர் சிறு பிரசுரம் வெளியிட்டோம். அதற்கு மறுப்பாக ஸ்ரீகாஞ்சியில் வாழும் ஸ்ரீமான் அண்ணங்கராசாரியார் "உண்மை ஸ்வரூபத்தின் ஆராய்ச்சி" என்று ஒன்றை வெளிப்படுத்தியிருக்கின்றார். அதில் அவர் "நம்மை தேசிகத்வேஷியென்று மூதலிக்கப் பெரு முயற்சி செய்கிறார்" என்றும், "இவர் நம்மை தேசிக த்வேஷியென்று மூதலிக்க முயன்றாராயினும் உண்மையுணருமவர்கள் ஒருபோதும் கலங்கார்கள்" என்றும் எழுதியிருக்கிறார்.

நாம் இவரைத் தேசிகத்வேஷியென்று மூதலிக்க முயற்சியே செய்யவேண்டியதில்லையே. பெரு முயற்சியெதற்கு? அநாமதேயம், அந்யதீயம் என்று சொல்லி விடுவித்துக்கொள்ள முடியாதபடி இவரது பெயரால் வெளிப்பட்டிருக்கும் க்ரந்தங்களிலுள்ள சிலவாக்கியங்களையெடுத்துக்காட்டுவதே இவரைத்தேசிகத்வேஷியென்று மெய்ப்பிக்கப்போதுமானது என்று நினைத்தோம். இதற்காக இவருடைய திவ்யப்ரபந்த வியாக்கியானங்களுள் சிலவற்றை நாம் பார்வையிட்டோம். அவைகளில் பிறரால் எழுதப்பட்ட அனேக விஷயங்கள் வரிவரியாக அப்படியே காணப்பட்டன. அவற்றுள் ஸ்ரீ உப. வே. வை. மு. சடகோப ராமாநுஜாசார்ஸ்வாமி முதலானோரின் க்ரந்தங்களிலுள்ள பல விஷயங்களை அப்படியே (அதாவது—கமா, கொடேஷன், ஆண்டிக் எழுத்து முதலிய ஒன்றுகூட விடாமல்) வரிவரியாகவும், பக்கம் பக்கமாகவும் அண்ணங்காராசாரியார் கைக்கொண்டு தன்னுடையனவாக எழுதியிருக்கிறார்.

அண்ணங்காராசார் பிறர் நூலிலுள்ள விஷயங்களையப்படியே கையாண்டு திவ்ய ப்ரபந்தங்களுக்கு எளிய நடையில் தெளிவாக உரையெழுதிய ஸாமர்த்தியத்தைப்பண்டிதர்கள் பராமர்சிப்பதற்காக ஸ்தாலீ புலாக நியாயப்படி சிலவிடங்களை மாத்திரம் எடுத்துக் காட்டுவோம்.

"பிறர் பொருளைத் தம் பொருள்போலப் பாவிக்கவேண்டும்' என்ற நீதிமுறைமை தவறாமல், பிறர் சிரமப்பட்டுக்கண்டு எழுதிய விஷயங்களை அப்படியே தங்களதாக எளிதில் எடுத்துக்கொள்பவர்" என்று ஸ்ரீ-உப-வே. வை மு. சடகோப ராமானுஜாசார்ஸ்வாமி அருளிச்செய் ...து இவ்வண்ணங்காராசார்ஸ்வாமிக்குச் சாலவும் பொருந்தும்.

170039



## 1. திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையின் முகவுரை.

1. திவ்ய ப்ரபந்த திவ்யார்த்ததீபிகை என்னும் உரையுடன்கூடிய திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும் 1914-ஷ அச்சிடப் பட்டிருக்கின்றன. அதின் முகவுரை 2-வது பக்கத்தில்— "சந்தனப் பொதியச் செந்தமிழ்த்தடவரையையுடைய தென்னாட்டிலே அருந்தமி ழாய்ந்தறிந்த ஆரியர்காள்! ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்திற்சிறந்த மெய்யடி யார்களென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவர்" என்று தொடங்கி, 5-வது பக்கம் "உரைப்பது- ஸம்ப்ரதாயம்" என்னுமளவாக 10- பாராக்கள் (126-வரிகள்) எழுதியிருக்கிறார்.

இந்த 10-பாராக்களிலுள்ள வாக்யாநுபூர்விகளெல்லாம் ஸ்ரீ சட கோப ராமாநுஜாசார்ஸ்வாமியின் திருவிருத்தத்தின் உரையில் "நம்மாழ் வார் வரலாறு" என்ற தலைப்பின் கீழுள்ள 1, 2, 3, பக்கங்களிலிருந்தும், 7ம்பக்கத்திலிருந்தும், சடகோபராமாநுஜாசார் ஸ்வாமியால் வெளியிடப் பட்ட 'ஆழ்வார்கள் சரித்திரம்' என்ற நூலின் முதல் நான்கு பக்கங்க ளிலிருந்தும் எடுத்து எழுதப்பட்டன என்பது இரண்டையும் ஒப்பிட் டுப் பார்ப்பவருக்கு நன்றாய் விளங்கும்.

ஆனால் சிற்சிலபதங்களைமட்டும் மாற்றியிருக்கிறார். அனேகமுண்டு- என்பதை, அளவற்றன—என்றும், பிரகாசிப்பித்தான்—என்பதை, வெளி யிட்டருளினான்—என்றும், மரபு—என்பதை, ஸம்ப்ரதாயம் என்றும், அநந்தம்—என்பதை, எல்லையில்லையென்றும், கொடுத்த என்பதை, தந்த என்றும், மாற்றியிருக்கிறார். இம்மாதிரியாகவேதான் மாற்றியிருப்பவை எல்லாமிருக்கின்றன.

2. திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை முகவுரையின் 9—ம் பக்கத்தில் "வடமொழியுந்தென்மொழியும் விரவிய மணிப்ரவாள நடையில் எழுதப் பட்டுள்ள பூர்வாசார்ய வ்யாக்யாநங்களெல்லாவற்றையும் அரும் பதவுரைகளை யுந் தழுவித் தமிழ் நடையில் ஒருரை இயற்றப்புகின் வெகு விரிவாய்விடுமா தலால், அங்ஙனஞ் செய்யாது, அவற்றைப் பெரும்பாலுந் தழுவிச் சிறு பான்மை உசிதமாக வேறு சில விஷயங்களையும் புதிதாகச் சேர்த்து எனது சிற்றறிவுக்கு ஏற்ப ஒருரை எழுதத் தொடங்கலாயினேன்"

என்று 6 வரிகள் எழுதப்பட்டிருக்கின்றன.

இவை, ஸ்ரீ சடகோபராமாநுஜாசார் ஸ்வாமியின் திருவிருத்த உரையின் முகவுரை 4-வது பக்கத்தில்

"வடமொழியுந் தென்மொழியும் விரவிய மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ள இந்த வியாக்கியாநங்கள் எல்லாவற்றையும் அரும்

பதவுரைகளையுந் தழுவித் தமிழ்நடையில் ஒருரை இயற்றப்புகின் வெகு விரிவாய் விடுமாதலால், அங்ஙனஞ் செய்யாது, அவற்றைப் பெரும் பாலுந்தழுவிச் சிறுபான்மை உசிதமான வேறுசில விஷயங்களையும் புதிதாகச்சேர்த்து எமது சிற்றறிவிற்கு ஏற்ப இவ்வுரை ஒருவாறு எழுதிமுடிக்கப்பட்டது"

என்று எழுதப்பட்டிருக்குமவைகளே முற்றிலும் எடுத்துக்கையாளப் பட்டன.

3. பின்னும், "இதில் அவசியமான பதப்பிரயோசனங்களையும், இன்றி யமையாத இலக்கணக் குறிப்புக்களையும் முக்கியமான புராணகதைக ளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள் கருத்து விசேஷார்த்தம் சொற் சுவை பொருட்சுவை யாப்பிலக்கணம் அணியிலக்கணம் முதலிய வற்றை அங்கங்கே இனிது விளக்கியிருத்தலோடு, ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயங்களையும் அகப்பொருள்துறையிலக்கணவகைகளையும் விவ ரித்திருக்கிறோம். அன்றி, பூர்வாசாரியர்களுடைய வியாக்கியானங்க ளின் வாக்கியங்களும் உரிய இடங்களில் இதில் எடுத்தாளப்பட்டுள் ளன; "முன்னோர் மொழிபொருளேயன்றியவர்மொழியும், பொன்னே போற் போற்றுவம்" (நன்னூல்) என்பது இலக்கணமாதலால்"

என்று வை. மு. சடகோப ராமாநுஜாசார்ஸ்வாமியின் திருவிருத்த உரையின் முகவுரையில் 4-வது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

இவற்றை அண்ணங்கராசார் திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை யின் 9, 10. பக்கங்களில்

" இதில், அவசியமான பதப்ரயோஜனங்களையும், இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், முக்கியமான புராண வரலாறுகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள். கருத்து, விசேஷார்த்தம், சொற் சுவை, பொருட்சுவை, யாப்பிலக்கணம் முதலியவற்றை ஆங்காங்கு வேண்டுழி இனிது விளக்குவதோடு ஸ்ரீவைஷ்ணஸம்ப்ரதாய முறை களையும், அகப்பொருள்துறையிலக்கண வகைகளையும் உள்ளவிடத்து விவரித்து வருமாறு முயன்றிருக்கிறேன். அன்றி, பூர்வாசார்யர்களு டைய வியாக்கியானங்களின் வாக்கியங்களும் உரியவிடங்களில் இதில் எடுத்தாளப்படும்; "முன்னோர் மொழிபொருளேயன்றி யவர் மொழியும், பொன்னே போற் போற்றுவம்" (நன்னூல்) என்பது இலக்கணமாதலால்"

ன்று அப்படியே எழுதியுள்ளார்.

N32 387 181.48

4. "திருக்கோவையார்க்கு" என்று ஆரம்பித்தபாராவும்(15-வரிகள்) ஸ்ரீ சடகோப ராமாநுஜாசார் திருவிருத்தவுரையின் முகவுரையின் 4-வது பக்கத்தில் அப்படியேயுள்ளது.

5. "கைப்பிழையென்றாவது அச்சுப்பிழையென்றாவது முக்குணங்களும் மாறிவரும்மாநுடரியற்கையாலாயதென்றாவது சோர்வு மானுடர்க்கு இயற்கையென்றாவது இராவிலும் விரைவிலும் செய்யவேண்டி இருந்தமையன்றி"
என்று திருவிருத்த வுரையின் இறுதியில் அறிவிப்பு 14-வது பக்கத்தில் இருப்பதைத்தழுவியும்,

"இதிற் காணப்படும் குற்றங்குறைகளைப் பெரியோர் தமது இயற்கை நற்குணத்தாற் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்கிறோம்."
என்பவற்றை அப்படியே யெடுத்துக்கொண்டும்

"முக்குணங்களும் மாறிவரும் மானுடரியற்கையாலாய கைப்பிழையும் அச்சுப்பிழையும், இராவிலும் விரைவிலும் எழுதவேண்டியிருக்கின்றமை பற்றி நேரும் பிறழ்வுமாகிய பல குற்றங்குறைகளைப் பெரியோர் தமது இயற்கை நற்குணத்தாற் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்."
என்று வரைந்திருக்கிறார்.

திவ்ய பிரபந்த திவ்யார்த்த தீபிகையின் முகவுரையிலேயே பிறரால் எழுதப்பட்டிருக்குமவற்றையப்படியே இவரெழுதியுள்ளாரென்றால் மற்றது கைமுதிக நியாயஸித்தம் என்று கற்றறிந்த கல்விமான்கள் கண்டுகொள்வது எளிதே. திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையிலுள்ளவை பிறருடையவையானதால் முகவுரையும் அவ்வகையாகவே இருக்க வேண்டும் போலும்.

ஸ்ரீ-உப-வை. மு. சடகோப ராமாநுஜாசார்ஸ்வாமி விகாரிஸூ (1900) திருவிருத்தவுரையை வெளியிட்டருளினார். இற்றைக்கு முப்பத்திரண்டு வருஷத்திற்கு முன் வெளிவந்த திருவிருத்தவுரையை யார் காணப் போகிறார் என்றும், கண்டாலும் நமது உரையையும் அதனையும் ஒப்பிட்டுப்பார்ப்பார் யாருளர் என்றும், பார்த்தாலும் வெளிப்படுத்த யார் முன்வருவார் என்றும் அண்ணங்கராசார் எண்ணினார்போலும்.

## 2. தனியன்.

ஸ்ரீ-உப-வே. வை. மு. சடகோபராமானுஜாசார்ஸ்வாமியின் திருவி உரையின் 15வது பக்கத்தில்

"சிறப்புப்பாயிரத்துக்கு வைஷ்ணவ சம்பிரதாயத்தில் 'தனியன்' என்று பெயர் வழங்கும். அது—நூலின் சிறப்பையாயினும் ஆசிரியர் சிறப்பையாயினும் இரண்டையுமாயினும் எடுத்துக் கூறுவது. நூலினுட்சேராமல் அதன் புறத்தே தனித்துநிற்றல்பற்றி, 'தனியன்' என்பதுகாரணப்பெயராம்; இதில், 'அன்' என்னும் ஆண்பால்விகுதி, உயர்வு குறித்தற்பொருட்டு அஃறிணைப் பெயரோடு வந்ததென்பர்; 'திருக்கோவையார்', 'நாலடியார்' என்பவற்றில், 'ஆர்'விகுதி போல" என்றிருக்கிறது.

இவற்றையே அண்ணங்கராசாரியார் பெரியாழ்வார் திருமொழி முகவுரையின் 11வதுபக்கத்தில் தனியன் என்ற தலைப்பின்கீழ்

"சிறப்புப்பாயிரத்துக்கு வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் "தனியன" என்று பெயர் வழங்கும். அது— நூலின் சிறப்பையாயினும் நூலாசிரியர் சிறப்பையாயினும் இரண்டையுமாயினும் எடுத்துக்கூறுவது. நூலினுட் சேராமல் அதன்புறத்தே தனித்து நிற்றல்பற்றித் தனியன் என்பது காரணப் பெயராம். இதில் 'அன்' என்னும் ஆண்பால் விகுதி உயர்வுகுறித்தற் பொருட்டு அஃறிணைப் பெயரோடு வந்ததென்க; "திருக்கோவையார்" "நாலடியார் என்பவற்றில் "ஆர்" விகுதி போல"

என்று அப்படியே எழுதிவிட்டார்.

## 3. திரு.

ஸ்ரீ-உ-வே. வை. மு. சடகோபராமானுஜாசாரியாரால் அச்சிடப்பட்ட திருவிருத்தத்தில் 13-வது பக்கத்தில்—

"திரு" என்னும் பலபொருளொரு சொல்—வடமொழியிலே"ஸ்ரீ" என்பதுபோல, தமிழிலே தேவர்கள் அடியார்கள், ஞான நூல்கள், மந்திரங்கள், புண்ணிய ஸ்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய எப்பொருள்களுக்கும்விசேஷணபதமாகி,அவற்றிற்கு முன்னே மகிமைப் பொருளைக் காட்டிவரும்: ஸ்ரீமகாவிஷ்ணு,

ஸ்ரீபக்திசாரர், ஸ்ரீராமாயணம், ஸ்ரீ அஷ்டாக்ஷரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீகைர விணி, ஸ்ரீபாதம் எனவும்; திருமால், திருமழிசைப் பிரான், திருவாய் மொழி, திருவெட்டெழுத்து, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திரு வடி எனவும் வழங்குமாற்றால் அறிக; இனி இதனை 'ஸ்ரீ' என்பதன் சிதைவென்பாருமுளர். இங்கே, இது—நூலுக்கு அடைமொழி. மேன் மையாகிய விருத்தமெனப் பண்புத்தொகையாகவாவது, மேன்மை யையுடைய விருத்தமென இரண்டனுருபும் பயனுந்தொக்கத்தொகை யாகவாவது விரிக்க—"

என்று 12வரிகள் காணப்படுகின்றன.

ஸ்ரீமான் ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசாரியார் தமது உரையுடன் கூடிய திருப்பாவை முதல் பதிப்பு 23-வது பக்கத்திலும், இரண்டாவது பதிப்பு 14-வது பக்கத்திலும்

"திரு" என்னும் பல பொருளொரு சொல்—வடமொழியிலே "ஸ்ரீ" என்பது போல, தமிழில் தேவர்கள் அடியார்கள், ஞான நூல்கள், மந்திரங்கள், புண்ணிய க்ஷேத்ரங்கள் புண்ணியதீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய எப்பொருள்களுக்கும் விசேஷண பத மாகி அவற்றிற்கு முன்னே மகிமைப்பொருளைக்காட்டிவரும்; ஸ்ரீமகா விஷ்ணு, ஸ்ரீபக்திஸாரர், ஸ்ரீராமாயணம், ஸ்ரீ அஷ்டாக்ஷரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீகைரவிணி, ஸ்ரீபாதம் எனவும், திருமால், திருமழிசைப்பிரான், திருவாய்மொழி, திருவெட்டெழுத்து, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திருவடி எனவும்வழங்குமாற்றால்அறிக. இனி, இதனை 'ஸ்ரீ' என்பதன் சிதைவு என்பாருமுளர். இங்கே, இது—நூலுக்கு அடைமொழி. மேன் மேன்மையாகிய பாவை எனப் பண்புத்தொகையாகவாவது, மேன் மையையுடைய பாவை என இரண்டனுருபும் பயனுந் தொக்கத் தொகையாகவாவது விரிக்க"

என்று அப்படியே அந்தப் பன்னிரண்டு வரிகளையும் எழுதிவிட்டார்.

ஆனால், திருப்பாவைக்கு உரையாதல்பற்றி "விருத்தமென" என் றிருக்கும் இரண்டிடத்திலும் "பாவையென" என்று மாத்திரம் மாற்றி யிருக்கிறார். புண்ணியஸ்தலங்கள் என்பதை, புண்ணிய க்ஷேத்திரங்கள் என்று மாற்றினார்.

இவர் இப்படியே திருச்சந்தவிருத்தத்தில் 4வது பக்கத்தில் "மேன் மையாகிய சந்தவிருத்தமென" என்றும், "மேன்மையையுடைய சந்த

விருத்தமெண'' என்றும் மாற்றி மற்றவைகளையப்படியே எழுதியுள்ளார் இங்கு ''புண்ணியஸ்தலங்கள்'' என்றே எழுதியிருக்கிறார்.

## 4 திங்கள்.

ஸ்ரீ-உப-வை. மு. சடகோபராமாநுஜாசாரியரும், சே. கிருஷ்ணமாசாரியரும், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும், இயற்றிய விரிவான உரையுடன் கூடிய அஷ்டப்ரபந்தத்திலுள்ள திருவரங்கத்துமாலை உரையில் 47-வது பாட்டில் (90-வது பக்கம்)

> ''திங்கள்— சந்திரன், அமாவாசைக்கு அமாவாசை ஒருமாசமெனக் கொண்டு சந்திர சம்பந்தத்தாற் காலத்தை வறையறுக்குஞ் சாந்திரமான ரீதிபற்றி, ''திங்கள்'' என்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று. 'மதி' என்பதும் இது. இலக்கணை''

என்று இருக்கிறது.

ஸ்ரீ காஞ்சியண்ணங்காசார் இவற்றை யப்படியே

> ''திங்கள்—சந்திரன். அமாவாசைக்கு அமாவாசை ஒருமாதமெனக் கொண்டு சந்திரஸம்பந்தத்தாற்காலத்தை வரையறுக்கும் சாந்திரமான ரீதிபற்றி திங்கள் என்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று. இலக்கணை''

என்று திருப்பாவை 2ம் பதிப்பில் 28-வது பக்கத்தில் வரைந்துவிட்டார்.

## 5. திருமாலிருஞ்சோலை.

அஷ்டப்ரபந்தம் அழகரந்தாதி 3-வது பக்கத்தில்

> ''ஆயிரம்பூம் பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே'' என்றபடி மிகப் பெரிய பல சோலைகளையுடைய மலையாதலால், ''மாலிருஞ்சோலை மலை'' என்றுதிருநாமம். மால்—பெருமை, இருமை—பெருமை; இவ்விரண்டும் தொடர்ந்து ஒரு பொருட்பன் மொழியாய் நின்றன. மால்-உயர்ச்சி; இருமை— பரப்பு என்று கொண்டு, உயர்ந்து பரந்த சோலைகளையுடைய மலையென்றலும் உண்டு. திரு— மேன்மை குறிக்கும் அடைமொழி. பரதகண்டத்தில் தென்னாடாகிய பாண்டியநாட்டிலுள்ள மலையாதல் பற்றி 'தென் திருமாலிருஞ்சோலைமலை' எனப்பட்டதாகவும் கொள்ளலாம்.''

என்றிருக்கிறது. இவற்றையே அண்ணங்காசாரியார்

"திருமாலிருஞ்சோலை— பாண்டியநாட்டுத் திருப்பதிகளுள் மிகச் சிறந்த திவ்யதேசம்: "ஆயிரம்பூம் பொழிலுமுடை மாலிருஞ் சோலையதே" என்றபடி மிகப்பெரிய பல சோலைகளையுடைய மலையாதலால், "மாலிருஞ்சோலைமலை" என்று திருநாமம். மால்-பெருமை, இருமை-பெருமை; இவ்விரண்டும் தொடர்ந்து ஒருபொருட்பன் மொழியாய்நின்றன. மால்-உயர்ச்சி,இருமை-பரப்பு என்றுகொண்டு, உயர்ந்து பரந்த சோலைகளையுடைய மலை யென்றலும் உண்டு. —"

என்று நாய்ச்சியார் திருமொழி 131-வதுபக்கத்திலும், பெரியாழ்வார் திருமொழி 284-வது பக்கத்திலும் எழுதியுள்ளார். ஆனல் இங்கு

"திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் பாண்டிய நாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்றும், வநகிரியென்று வடமொழியிற் கூறப்படுவதும், "கோயில் திருமலை பெருமாள்கோயில் அழகர் திருமலை" என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகிற நான்கு தலங்களுள் ஒன்றும், "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்மாலிருஞ் சோலை யென்னும், பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்' என்றபடி ஆன்ரோர் கொண்டாடப்பெற்ற மகிமையுடையதுமான"

என்று அழகரந்தாதி முதற்பக்கத்திலிருப்பதை முதலில் சேர்த்தும், நாய்ச்சியார் திருமொழியில் விடப்பட்டிருந்த "திரு—மேன்மைகுறிக்கும் அடைமொழி. பரதகண்டத்தில் தென்னுடாகிய பாண்டிய நாட்டிலுள்ள மலையாதல்பற்றித் "தென் திருமாலிருஞ்சோலை" எனப் பட்டதாகவும் கொள்ளலாம்" என்பதை இறுதியிற் சேர்த்துமிருப்பது காணத்தக்கது.

## 6. பின்னை.

அஷ்டப்ரபந்தம் திருவேங்கடத்தந்தாதி "மரகதத்தை" என்ற 93-ஆம் செய்யுளின் உரையில் (115-பக்கம்)

"பின்னையென்பது அவள்பெயர். ந. சிறப்புப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல் (உபசர்க்கம்) நச் செள்ளை, நப்பாலத்தான், நக்கீரன் என்ருற்போல"

என்றும், திருவரங்கத்துமாலை "பின்னைக்கினிய பெருமாள்" என்கிற 21-வது செய்யுளின் உரையில் (48-பக்கம்)

"பின்னை — நப்பின்னை, ஸ்ரீ கிருஷ்ணனது மனைவியரில் தலைமையுடையவள்; கும்பனென்னும் இடையர் தலைவனது மகள். இவளை மணஞ்

செய்துகொள்ளுதற்காக, இவள் தந்தை கன்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அசுராவேசம்பெற்ற எழு எருதுகளையுங் கண்ணபிரான் எழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழு வினனென்று நூல்கள்கூறும்............ இவள், திருமாலின் தேவி யருள் நீளாதேவியின் அம்சமெனப்படுவள்."

என்றுமிருக்கிறது.

அண்ணங்கராசாரியாரோ இதனையே திருப்பாவையின் 9-வது பக்கத்திலே

"நீளா—நப்பின்னை; பின்னை என்றும் பெயர்; ந என்பது சிறப்புக் குறிப்பு; நக்கீரன் என்றவிடத்தில்போல. இவள் கண்ணபிரானது மனைவியரில் தலைமையுடையவள்; கும்பனென்னும் இடையர் தலை வனது மகள். இவளை மணஞ்செய்துகொள்ளுதற்காக, இவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்குமடங்காத அஸுராவேசம் பெற்ற எழு எருதுகளையும் கண்ணபிரான் எழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவினனென்று புராணங்கூறும். இவள் திருமாலின் தேவியருள் நீளாதேவியின் அம்சமெனப்படுதலால்......

என்று காபியடித்து எழுதியுள்ளார்.

இப்படியே பெரியாழ்வார் திருமொழியில் 276-வது பக்கத்திலும் எழுதியுள்ளார்.

## 7. மாலை

அஷ்டபிரபந்தம் திருவரங்கத்துமாலை 3-வது பக்கத்தில்
ஸ்ரீ சடகோபராமாநுஜாசாரியார்,

"மாலையென்பது-பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அதன் இலக் கணம்— ஒரு விஷயத்தைக் குறித்துப் பல செய்யுள் கூறுவது. திரு வரங்கம் பெரியகோயிலிலெழுந்தருளியிருக்கின்றதிருமாலின் திருவடி களிலேசூட்டும் திருமாலை போலுதலால், திருவரங்கத்து மாலையெனப் பட்டது................"முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகிறியானும் நூற்கு எய்தும்பெயரே" என்று கூறப்படுகின்ற நூற்பெயர் வகைகளுள் நுதலிய பொருளினாலும் தன்மையினாலும் பெயர்பெற்றது இந்நூலென அறிக. (நுதலிய பொருள்—நூலிற் கூறப்பட்ட விஷயம். தன்மை நூலின் இயல்பு)"

என்று எழுதியிருக்கிறார்.

இதனை அப்படியே அண்ணங்காசாரியார் திருமாலையின் 2-வது பக்கத்தில்

"ஒரு விஷயத்தைக் குறித்துப் பலசெய்யுள் கூறுவது மாலை எனப் படும். தமிழில் பலவகைப் பிரபந்தங்களுள் மாலை என்பது ஒன்று... ......இப்பாமாலை ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் சாத்தும் பூமாலை போலுதலாலும் இந்நூல் திருமாலை எனத் திருநாமம்பெற்றது. பிர பந்தத்திற்குப் பெயரிடும் வகையைக் கூறுமிடத்து "முதனூல் கருத் தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித் தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும்பெயரே. (நன்னூல்—பொதுப் பாயிரம்) என்று கூறப்பட்டிருத்தலால், நுதலிய பொருளினாலும்தன் மையினாலும் பேர் பெற்றது இந்நூல் என்க. (நுதலிய பொருள்- நூலிற் கூறப்பட்ட விஷயம். தன்மை-இயல்பு)"

என்று எழுதிவிட்டார். இங்கே ஆண்டிக் எழுத்து பிராகெட் முதலிய வைகளையும் அதேபோல் பதிப்பித்திருப்பது கவனிக்கத்தக்கது.

## 8. விருந்தாவனம்

ஸ்ரீ-உப-வே. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்ஸ்வாமி திரு வேங்கடத்தந்தாதி 54-வது செய்யுளின் உரையில் (75-வது பக்கம்) "விருந்தாவனம் என்பது" என்று தொடங்கி எழுதிய 14-வரிகளை, ஸ்ரீ அண்ணங்காசார் நாய்ச்சியார்திருமொழியில் 209-வது பக்கத்தில் அப்படியே எழுதியிருப்பதைக் கீழே காட்டுகிறோம்.

[குறிப்பு:— 209-வது பக்கத்தை 193 என்று அச்சிட்டிருப்பது பிழை யென்று அறிக.]

| சடகோபராமாநுஜாசாரியார். | அண்ணங்காசாரியார். |
| --- | --- |
| விருந்தாவனம் என்பது— கண்ணன் அவதரித்த வட மதுரைக்குச் சிறிது தூரத்தில் யமுநாநதி தீரத்திலுள்ள இடம். கண்ணன் வளர்ந்த இடமானகோகுலமெனப்படுகிற திருவாய்ப்பாடியிலுள்ள நந்தகோபர் முதலான ஆயர்கள், அங்குப் பூதனை வந்து இறந்தது சகடு மாறி வீழ்ந்தது இரட்டை மருதமரம் முறிந்தது முதலியவற்றை உற்பாதங்களெனக்கொண்டு | விருந்தாவனம் என்பது — கண்ணன் அவதரித்த வட மதுரைக்குச் சிறிது தூரத்தில் யமுநாநதிக் கரையிலுள்ள இடம். கண்ணன் வளர்ந்த இடமான கோகுலமெனப்படுகிற திருவாய்ப்பாடியிலுள்ள நந்தகோபர் முதலான ஆயர்கள், அங்குப் பூதனை வந்து இறந்தது சகடுமாறி வீழ்ந்தது இரட்டை மருதமரம் முறிந்தது முதலிய வற்றை உற்பாதங்களெனக்கொண்டு |

**சடகோபராமாநுஜாசாரியார்.**

அஞ்சி மகாவநமெனப்படுகிற அவ் விடத்தைவிட்டுக்கன்று காலிமுதலிய எல்லாப் பொருள்களோடும் பிருந்தா வனத்திற் சென்று குடியேறினர். நெருஞ்சிற் காடாய்க் கிடந்த அந்தப் ப்ருந்தா வனம், கிருஷ்ண பகவான் குளிர்ந்த திருவுள்ளத்தோடு அநுக் கிரகித்ததனால் பசுக்கள் முதலான வை விருத்தியடைதற்கு எற்ப மிகச் செழிப்புற்றது. பின்பு அங்குநெடுநாள் கண்ணன் கன்றுகளையும் பசுக்களை யும் மேய்த்தல் முதலிய பல திருவிளை யாடல்கள் செய்துகொண்டு வளர்ந் தனனாதலால், "விருந்தாவனத் தாய்" என்று விளிக்கப்பட்டனன். விருந்தா வனம் – ப்ருந்தா வனமென்ற வட சொல்லின் விகாரம், நெருஞ்சிக்கா டென்பது பொருள்.

**அண்ணங்கராசாரியார்.**

அஞ்சி மஹாவநமெனப்படுகிற அவ் விடத்தைவிட்டுக்கன்று காலிமுதலிய எல்லாப் பொருள்களோடும் ப்ருந்தா வனத்திற் சென்று குடியேறினர். நெருஞ்சிக் காடாய்க்கிடந்த அந்த ப்ருந்தா வனம், கிருஷ்ண பகவான் குளிர்ந்த திருவுள்ளத்தோடு அநுக் ரஹித்ததனால், பசுக்கள் முதலான வை விருத்தியடைதற்கு எற்ப மிகச் செழிப்புற்றது பின்பு அங்குநெடுநாள் கண்ணன் கன்றுகளையும் பசுக்களை யும் மேய்த்துக்கொண்டுபல திருவிளை யாடல்கள் செய்துகொண்டு வளர்ந் தருளினன். ப்ருந்தாவநம் என்ற வட சொல் விருந்தாவனமென விகாரப் பட்டது; நெருஞ்சிக் காடென்பது பொருள்.

"வளர்ந்தனனாதலால் 'விருந்தாவனத்தாய்' என்று விளிக்கப் பட்டனன்" என்பது இங்குப் பொருந்தாதென்பதை உணர்ந்து அதனை விலக்கியிருக்கிறார்.

## 9. ஆண் பெண்ணாதல்.

இவ்விஷயமாய்ச்சடகோப ராமாநுஜாசார் ஸ்வாமி திருவரங்கத்தந் தாதி 24 வது பாசுரத்தின் உரையில் (50-வது பக்கம்) எழுதியிருப்பதை அப்படியே அண்ணங்கராசார் பெரியாழ்வார் திருமொழி ஐயபுழுதி யின் அவதாரிகையில் (226-வது பக்கம்) முன் பின்னாய் எழுதியிருப் பதைக் கீழே பிரசுரிக்கிறோம்; காண்க.

**சடகோபராமாநுஜாசாரியார்.**

ஆண்பெண்ணாதல்கூடுமோவெனில்- "கண்ணிற்காண்பரேல் ஆடவர்பெண் மையைஅவாவுந்தோளினாய்", "வாரா கவாமனனேயரங்கா வட்டநேமி வல வா ராகவா உன் வடிவுகண்டால் மன் மதனும்மடவாராகஆதரஞ்செய்வான்" என்பவாதலாலே,இது கூடும். தண்ட

**அண்ணங்கராசாரியார்.**

ஆண் பெண்ணாதல் கூடுமோ? எனில்;– "கண்ணிற்காண்பரேல் ஆட வர் பெண்மையை அவாவுந் தோளி னாய்" (கம்பராமாயணப்பாட்டு) வாரா கவாமனனே அரங்காவட்டநேமிவல வா ராகவா உன் வடிவுகண்டால் மன் மதனும்மடவாராகவாதரஞ்செய்வன்"

**சடகோபராமாநுஜாசாரியார்.**

காரணியவாசிகளான முனிவர் இராம பிரானது சௌந்தரியாதிசயத்தில் ஈடுபட்டுத் தாம் பெண்மையைப் பெற விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையராய்க் கண்ணனைக் கூடின ரென்ற ஐதிஹ்யமும் உணர்க. 'கண்ணனுக்கே, யாமது காமம் அறம்பொருள் வீடிதற்கென்றுரைத்தான், வாமனன் சீலன் இராமாநுஜன் இந்த மண்மிசையே" என்பதன் பொருளும் அறியற்பாலது. "பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறு மூலையினாள்", "வாண்மதர் மழைக்கணேக்கி, ஆண் விருப்புற்றுநின்றார் அவ்வளைத்தோளினாரே" எனப் பெண் ஆணுகுமிடமும் உண்டு.)........................

புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்குமுன் உலகமுழுதும்பெண்தன்மையாதலாலும், ஜீவாத்மாவினது சுவாதந்திரியமின்மையும், பாரதந்திரியமும்......................

**அண்ணங்கராசாரியார்.**

(திருவரங்கத்தந்தாதி—கூ0) என்பவாதலால் இது கூடும். "பெண்டிருமாண்மைவெஃகிப் பேதுறு மூலையினாள்" (சீவகசிந்தாமணி) எனப் பெண் ஆணுகுமிடமும் உண்டு.

புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலகம் அடங்கப் பெண்தன்மையாதலாலும், ஜீவாத்துமாவினது ஸ்வாதந்திரியமின்மையும், பாரதந்திரியமும் முதலியன ஆழ்வார்க்குத் தலைமகளாகுந் தன்மை நேர்தற்கு ஏதுவாம்; தண்டகாரணியவாஸிகளான முனிவர் இராமபிரானதுஸௌந்தர்யத்திலீடுபட்டுப்பெண்மை விரும்பி மற்றொருபிறப்பில் ஆயர் மங்கையராய்க் கண்ணனைக் கூடினர் என்ற ஐதிஹ்யமும் உணர்க. "கண்ணனுக்கேயாமது காமம் அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான், வாமனன் சீலன் இராமாநுஜசனிந்த மண்மிசையே" என்பதன் பொருளும் அறியற்பாலது.

## 10. சூர்ப்பணகையை அங்கபங்கப்படுத்தியது.

இவ்விஷயமாய்ச்சடகோப ராமாநுஜாசார் ஸ்வாமி திருவேங்கடமாலை 49-வது செய்யுளின் உரையில் (50-வது பக்கம்) 16 வரிகள் எழுதியிருக்கிறார். இவற்றையப்படியே அண்ணங்காசாரியார் பெரியாழ்வார் திருமொழி 260-வது பக்கத்தில் எழுதியிருக்கிறார். இதைக் கீழே காட்டுவோம். இதனைக் கண்டு வித்வான் இவர் விசேஷார்த்த முரைக்கும் வியப்பைக் காண்க.

**சடகோபராமாநுஜாசாரியார்.**

சூர்ப்பணகையை அங்கபங்கப்படுத்தியது இராமபிரானது திருத் தம்பியான இளைய பெருமாளினது செய்கையாயினும் அதனைப் பெருமாள் மேல் ஏற்றிச்சொன்னது, இராமபிரா

**அண்ணங்கராசாரியார்.**

இங்ஙனம் இவளை [சூர்ப்பணகையை] அங்கபங்கப்படுத்தியது இராமபிரானது திருத்தம்பியான இளைய பெருமாளது செய்கையாயினும் இப்பாட்டில் அதனைப் பெருமாள் மேல்

### சடகோபராமாநுஜாசாரியார்.

னதுகருத்திற்கு எற்ப அவன்கட்டளையிட்டபடி இவன் செய்தனனாதலின் எவுதற்கருத்தாவின் வினையாதல்பற்றியென்க. அன்றியும், இளைய பெருமாளும் திருமாலினது திருவவதாரமேயாதலால்அங்ஙனஞ்சொல்லத்தட்டில்லை. மற்றும், "ராபஃஸ்யதக்ஷிணோபாஹு:" என்றபடி இராமனுக்கு இலக்குமணன் வலத் திருக்கையெனப் படுதலால், அங்ஙனம் கையாகிற இலக்குமணனதுசெயலை இராமன்மேல் ஒற்றுமை நயம்பற்றி எற்றிச் சொல்லுதல் தகுதியே. "அரக்கி மூக்கை நீக்கிக் கரனோடு தூடணன் தன்னுயிரை வாங்கி" என்று குலசேகராழ்வாரும், 'தன்சீதைக்கு, நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளைக், கூரார்ந்த வாளாற் கொடிமூக்குங் காதிரண்டும், ஈராவிடுத்தவட்கு மூத்தோனை வெந்நரகஞ், சேராவகையே சிலைகுனித்தான்' என்று திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்தமையும் காண்க. "தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது................ தம்முடைய தோளாயிருக்கிற இளைய பெருமாளை இடுவித்துத் தண்டிப்பித்தார்" என்ற வியாக்கியான வாக்கியமும் உணரத்தக்கது.

### அண்ணங்கராசாரியார்.

எற்றிச்சொன்னது, இராமபிரானது கருத்துக்கு எற்ப அவன் கட்டளையிட்டபடி இவன் செய்தனனாதலின், எவுதற்கருத்தாவின் வினையாதல்பற்றியென்க. அன்றியும், இளைய பெருமாளும் திருமாலினது திருவவதாரமேயாதலால், அங்ஙனஞ்சொல்லத் தட்டில்லை. மற்றும்,

'ராகவஸ்ய தக்ஷிணோ பாஹு:'

என்றபடி ராமனுக்கு லக்ஷ்மணன் வலத்திருக்கையெனப்படுவதால், அங்ஙனம் கையாகிற லக்ஷ்மணனது செயல் இராமன்மேல் ஒற்றுமை நயம்பற்றி எற்றிச் சொல்லுதல் தகுதியே. "அரக்கிமூக்கை நீக்கிக்கரனோடு தூடணன்றனுயிரை வாங்கி" என்று குலசேகராழ்வாரும், "தன் சீதைக்கு, நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளைக் கூரார்ந்தவாளாற் கொடிமூக்குங் காதிரண்டும், ஈராவிடுத்து" என்று திருமங்கையாழ்வாரும், "அரக்கி மூக்கினொடு வார்காது மீர்ந்தார் வரை" என்று பிள்ளைப் பெருமாளையங்காரும் அருளிச்செய்துள்ளமை காண்க. "தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது...................தம்முடைய தோளாயிருக்கிற இளைய பெருமாளை இடுவித்துத் தண்டிப்பித்தார்" என்பது பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செயல்.

இங்கு திருவேங்கடமாலை 49-வது செய்யுளின் ஓர் பாகத்தைக் குறிப்பிட்டு "என்று பிள்ளைப்பெருமாளையங்காரும்" என்று எழுதியிருப்பதுமாத்திரம் இவரது கைவேலை.

பெருமாள் திருமொழி 129வது பக்கத்தில் "அரக்கிமூக்கை நீக்கி" ...ன்றவிடத்திலும் இதேபோல் சிலவரிகளைமட்டும் எழுதியிருக்கிறார்.

## 11. பரசுராமனோடு போர்புரிதல்.

திருவரங்கத்துமாலை மாதண்டமேவும் என்ற 39-வது பாடலின் உரையில் (76-வது பக்கம்) இருக்கும் வாக்கியங்களை அண்ணங்கராசார் பெரியாழ்வார் திருமொழியில் (252—253வது பக்கங்களில்) அப்படியே எழுதிவிட்டார்.

சடகோபராமாநுஜாசாரியார்.

விஷ்ணுவின் தசாவதாரங்களுள் ஆறும் அவதாரமான பரசுராமன் ஏழாம் அவதாரமான தசரதராமன் மீது கோபித்தலும், அவ்விருவரும் ஒருவரோடொருவர் பொருதலும், அவர்களில் ஒருவரை மற்றொருவர் வெல்லுதலும் பொருந்துமோவெனின்,— துஷ்டர்களாய்க் கொழுத்துத் திரிந்த அரசர்களைக் கொல்லுதற்பொருட்டுப்பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்தி விசேஷம் அக்காரியம் முடிந்தபின்பு அவ் விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனாற் கவர்ந்துகொள்ளப்பட்டதாதலிற் பொருந்துமென்க. இதனால் ஆவேசாவதாரத்தினும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

அண்ணங்கராசாரியார்.

விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஆறுமவதாரமான பரசுராமனும் ஏழாமவதாரமான தசரத ராமனும் ஒருவரோடொருவர் பொருதலும் அவர்களில் ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோ? எனின்; துஷ்டர்களாய்க்கொழுத்துத் திரிந்த அரசர்களைக்கொல்லுதற் பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்தி அக்காரியம் முடிந்தபின் அவ்விஷ்ணுவின் அவதாரமான தசரத ராமனாற் கவர்ந்து கொள்ளப்பட்டதாதலாற் பொருந்துமென்க. இதனால், ஆவேசாவதாரத்தினும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

“அவ் விஷ்ணுவின் அம்சாவதாரமான” என்பதில் ‘அம்ச’ என்பதை எடுத்தது மேலுக்குப் பொருந்தாதென உணர்க. “விஷ்ணுசக்தி விசேஷம்” என்பதில் விசேஷத்தை எடுத்ததும் ஓர்விசேஷம்.

இதையே “முன்னொரு நாள் மழுவாளி சிலை வாங்கி” என்ற பெருமாள் திருமொழிப் பாசுரத்தின் உரையிலும் (118வதுபக்கம்) எழுதியிருக்கிறார்.

170039
சென்னை-600 002.

## 12. சடகோபன்.

ஸ்ரீ சடகோப ராமாநுஜாசார் ஸ்வாமி திருவிருத்தவுரையின் நம்மாழ்வார் வரலாற்றில் 5-வது பக்கத்தில், நம்மாழ்வாருக்குச் சடகோபன் என்ற திருநாமம் வந்ததற்குக் காரணத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ அண்ணங்கராசாரியார் அதனை அப்படியே கண்ணிநுண் சிறுத்தாம்பின் தனியன் உரையில்(19-வது பக்கம்) எழுதியிருப்பதைப் பண்டிதர்கள் பார்க்கும்படி இரண்டையும் கீழே காட்டுகிறோம்.

அண்ணங்கராசாரியார்.

கர்ப்பத்திலிருக்கிறபொழுது ஞானிகளாயிருக்கின்ற குழந்தைகளைப் பிறந்தவுடனே தனது ஸ்பர்சத்தால்அஜ்ஞாநத்துக்குஉள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடுந் தன்மையதான சடமென்னும் வாயு, இவ்வாழ்வார் அவதரித்த பொழுது இவரையும் தொடுதற்கு வர, அப்பொழுது இவர் அதனை ஹுங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்ததனால் சடகோபர் என்று இவருக்குத் திருநாமமாயிற்று.

எம்பெருமானுடைய திவ்யமங்கள குணங்களாகிய அமுதவெள்ளத்திலே முழுகிமிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராதல் பற்றி ஆழ்வார்கள் என்று..............

சடகோப ராமாநுஜாசாரியர்.

கர்ப்பத்திலிருக்கும்பொழுது ஞான முடையனவா யிருக்கிற குழந்தைகளைப் பிறந்தவுடனே தனதுபரிசத்தால் அஜ்ஞானத்துக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணி விடுந் தன்மையதான சடமென்னும்வாயு இவரையும் பிறந்த பொழுது தொடுதற்குவர, அப்பொழுது இவர் அதனைஉங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்ததனால் இவருக்கு'சடகோபர்'என்று திருநாமமாயிற்று.

இவர்கள்,பகவானுடைய சகலமங்கள குணங்களாகிய அமுதவெள்ளத்திலேமுழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராதலால்...............(3-வது பக்கம்)

## 13. நரஸிம்மாவதாரத்திலுள்ள விசேஷங்கள்.

திருவரங்கத்துமாலை 29-வது பாடலின் உரையில் (59-வதுபக்கம்) நாஸிம்மாவதாரத்தில் அருமையாக நோக்கத் தக்க விஷயங்களைப்பற்றி 43-வரிகள் ஸ்ரீ சடகோபராமாநுஜாசாரியார் ஸ்வாமி எழுதியிருக்கிறார்.

அவற்றைஅப்படியே அண்ணங்கராசார் திருச்சந்தவிருத்தத்தில் 23-வது பாசுரத்தினுரையில் (63.63-பக்கங்கள்)எழுதியிருக்கிறார்.

[illegible] சடகோப ராமாநுஜாசாரியாரின் ஸூக்திகளை இதன் 16,18-பக்கங்களிலும், [illegible]ண்ணங்கராசாரின் வாக்கியங்களை 17, 19-வது பக்கங்களிலும் காட்டுகிறோம்

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால் 'முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளே வைத்து நாட்டியதூண் அது' என்று சங்கிக்கக்கூடுமாதலால்அதற்கு இடமில்லாதபடி அவ்விரணியன்தானே தனது உயரம் பருமனுக்குப் பொருந்தப் பார்த்து அளந்து நாட்டின அவன் வாயில் தூணிலிருந்தே திருமால் நரசிங்கமாய்த் தோன்றினானென்பதும், வேறு யாரேனும் கையால் தட்ட அத்தட்டிய இடத்திலிருந்து தோன்றினால் 'அவர் தம்கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டு வந்து தூணிலே பாய்ச்சினர்' என்று சொல்லக்கூடுமாதலால் அதற்கு இடமில்லாதபடி அவ்விரணியன் தானே தன் கையால் தட்டியவளவில் திருமால் தோன்றினானென்பதும், அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினால் 'எங்கும் உளன்' என்று பிரஹலாதன் செய்த பிரதிஜ்ஞை தவறி 'நீ சொல்லுகிறவன் இங்கு இல்லை' என்று இரணியன் செய்த பிரதிஜ்ஞை நிலைநிற்குமாதலால் அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே திருமால் தோன்றினானென்பதும், அவன் தட்டின பின்பு சிறிது நேரங்கழித்து நரசிங்கம் தோன்றினால் 'நான் தட்டினபொழுது திருமால் அங்கு இல்லை' என்று அவன் சொல்லித் திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கின்ற உண்மைநிலையை மறுக்கக்கூடுமாதலால் அதற்குமிடமில்லாதபடி கர்ப்பம் கருமுதிர்தல் பிரஸவம் முதலியனவும் குழந்தையாய்ப் பிறத்தல் பிறகு நாளடைவில் வளர்தல் என்பனவும்இல்லாமல் அவ்வெதிரியினும் பருத்து வளர்ந்த வடிவையுடையவனாய் அப்பொழுதே தோன்றினானென்பதும், அங்ஙனம் தோன்றியவிடத்தும் இரணியன் வெல்லவும் நரசிங்கமூர்த்தி தோற்கவுமானால் 'எங்கும் உளன்' என்ற உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமற் போய்விடுதல்பற்றி அதனினும் தோன்றாதிருத்தலே நலமாதலால் அங்ஙனமாகாதபடி அக்கொடியவனைத் தவறாது அழித்தானென்பதும், தேவர் மனிதர் விலங்குதாவரம் என்னும் நால்வகைப் பிறப்புக்களிலுள்ளவற்றில் ஒவ்வொன்றினாலும் தனித்தனி சாகாதபடியும் பிரமசிருஷ்டிக்கு உட்பட்ட எந்தப்பிராணியினாலும் சாகாதபடியும் அவன் பிரும ருத்திராதிகளிடத்துப் பெற்ற பெருவரம் பழுதுபடாதிருத்தல் வேண்டி நரங்கலந்த சிங்கமாய்த் தன்னைத் தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினானென்பதும், அஸ்திரசஸ்திரங்களில் ஒன்றினாலும் சாகாதபடியும்ஈரமுள்ளதனாலும்ஈரமில்லதனாலும்இறவாதபடியும் பெற்

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினல் 'முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளே வைத்து நாட்டியதூண் அது' என்று சொல்லிவிடக் கூடுமாகையாலே அந்த வார்த்தைக்கு இடமில்லாதபடி அந்தஇரணியன்தானே தனது உயரம் பருமனுக்குப் பொருந்தப்பார்த்து அளந்து நாட்டிய அவன் வாசல் தூணிலிருந்தே திருமால் நரசிங்கமாய்த் தோன்றினனென்பதும்,—வேறு யாரேனும் கையால் தட்ட அத்தட்டியவிடத்திலிருந்து தோன்றினல் 'அவர் தம்கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டு வந்து தூணிலே பாய்ச்சினர்' என்று சொல்லிவிடக்கூடுமாகையாலே அந்த வார்த்தைக்கு அவகாசமில்லாதபடி அவ்விரணியன் தானே தன் கையால் தட்டினவளவில் திருமால் தோன்றினனென்பதும்,—அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினல் 'எங்கும் உளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த பிரதிஜ்ஞை தவறி 'நீ சொல்லுகிறவன் இங்கு இல்லை' என்று இரணியன் செய்த பிரதிஜ்ஞை நிலைநிற்குமாகையாலே அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே திருமால் தோன்றினனென்பதும்,—அவன் தட்டினபிறகு சிறிதுபோதுகழித்துநரசிங்கம்தோன்றினல்'நான் தட்டினபொழுது திருமால் அங்கு இல்லை' என்று அவன் சொல்லி திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிற உண்மை நிலையை மறுக்கக்கூடுமாகையாலே அதற்கு மிடமறும்படி கர்ப்பம் கருமுதிர்தல் பிரஸவம் முதலியனவும் குழந்தையாய்ஜநித்தல் பிறகு நாளடைவில் வளர்தல் என்பனவும் இல்லாமல் அவ்வெதிரியினும் பருத்து வளர்ந்த வடிவையுடையவனய் அப்பொழுதே தோன்றினனென்பதும்,—அங்ஙனம் தோன்றியவிடத்தும் ஹிரண்யன் ஜயசீலனுகவும் நரஸிம்மன் பராஜிதனுகவும் நேர்ந்தால் 'எங்கும் உளன்' என்ற உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமற் போய்விடுதல்பற்றி அதைவிடத்தோன்றுமலிருப்பதே நலமென்னும்படியிருக்குமாதலால் அங்ஙனமாகாதபடி அக்கொடியவனைத் தவருது அழித்தனனென்பதும்,—தேவர் மனிதர் விலங்குகள் தாவரம் என்னும் நால்வகைப்பிறப்புக்களிலுள்ளவற்றில் ஒவ்வொன்றினுலும்தனித்தனிசாகாதபடியும்ப்ராஹ்மசிருஷ்டிக்கு உட்பட்டஎந்தப்பிராணியினுலும் சாகாதபடியும் அவன்ப்ராஹ்ம ருத்திராதிகளிடத்துப்பெற்றபெருவரம் பழுதுபடாமைக்காக நரங்கலந்த சிங்கமாய் ப்ராஹ்மஸிருஷ்டியினுட்படாமல்தன்னைத் தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினனென்பதும்,—அஸ்திர

சடகோபராமாநுஜாசாரியார்.

பகலிலும் இரவிலும் சாகாதபடி பெற்றவரம் பொய்படாதவாறு அப் பகலிரவுகளின் சந்தியாகிய மாலைப்பொழுதிற் கொன்றனனென்பதும், பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்ற வரத்தை ஒதுக்குமாறு தன் மடிமீதுவைத்துக் கொன்றனனென்பதும், வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதபடி பெற்றவரத்திற்கு விரோதமின்றி வாயிற்படி மீது வைத்துக்கொண்டு கொன்றனனென்பதும் முதலியன அருமையாகக் கருதத்தக்க விஷயங்கள். 'சுராசுரர் முனிவர் நரர் கையிற் பாரிற் சுடர் வானிற் பகலிரவிலுள்புறம்பிற், பெரும் படையிற்றன் சாகாவிரணியன்தனைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்ற தூணில், நாகரியாய்ப்பொழுது புகுநேரந்தன்னில் நாடியுதித் துயர்வாசற்படி மீதேறி, இரணியனைத் தொடைமிசை வைத்துகிரினாலேஇருபிளவாக்கினையரியே யெம்பிரானே' என்பர் பின்னோரும்.

## 14. உருப்பசி.

இவ்விஷயமாய், ஸ்ரீசடகோபராமாநுஜாசார் ஸ்வாமி, வில்லிபுத்தூரார் அருளிய மகாபாரதம் விராடபர்வத்தில் நான்காவதான நிரைமீட்சிச் சருக்கம் 137வது பாடலினுரையில் எழுதியிருக்கிறார். (1909 வருஷத்திய எப். எ. கிளாஸ் பாடபுத்தகத்தின் நோட்சில் 135-வது பக்கம்.)

சடகோபராமாநுஜாசாரியார்.

உருப்பசி - ஊர்வஶீ என்ற வடசொல்லின் சிதைவு; அப்பெயர் - தொடையினின்று பிறந்தவளென்று பொருள்படும்: ஊரு - தொடை.........குருசிஷ்யக்கிரமத்தை உலகத்தார்க்கு உணர்த்துதற் பொருட்டு விஷ்ணுவின் அம்சமாய்க்குருவும் சிஷ்யனுமாகத் திருவவதரித்த நாராயணன் நரன் என்ற முனிவர்கள் பதரிகாச்சிரமத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கையில் இந்திரனேவலால் அப்ஸரஸ்திரீகள் பலர் அங்கு வந்து தங்களுடைய மேனி மினுக்கினாலும் ஆடல் பாடலாதி விநோதங்களாலும் அவர்களுடைய தவத்துக்கு இடையூறு செய்யத் தொடங்க, அதனாற் சிறிதுங்கலங்காத அவர்களுள் நாராயணமுனிவர் அம்மகளிரை அவமானப்படுத்தக்கருதித் தமது தொடையினின்று ஒரு கட்டழகியைச் சங்கற்பத்தாலுண்டாக்க, அவளது ஒப்புயர்வற்ற திவ்விய சௌந்தரியத்தை நோக்கி அத்தேவமாதர்கள் மிகவெள்கி அவளையே தங்கட்குத்தலைவியாகக் கொண்டு அவளுடன் தமது உலகத்திற்குச் சென்றனரென்பது வரலாறு; அவளே ஊர்வசி,

சஸ்திரங்கள் ஒன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாத தினாலும் இறவாதபடியும் பெற்ற வரம் வீண்போகாமே நகங்களினால் கீண்டு கொன்றனனென்பதும்,— பகலிலும் இரவிலும் சாகாதபடி பெற்றவரம் பொய்படாதபடி அப்பகலிரவுகளின் ஸந்தியாகிய மாலைப் பொழுதிலே கொன்றனனென்பதும், பூமியிலும் வானத்திலும் சாகாத படி பெற்றவரம் மெய்யாம்படி தன் மடிமீதுவைத்து கொன்றனனென் பதும்,—வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதிருக்கும்படி பெற்ற வரத்திற்கு விரோதமின்றிவாசற்படியின்மீது வைத்துக்கொண்டு கொன் றனனென்பதும் இவைபோல்வன பலவிசேஷங்கள் இவ்வதாரத்திலே அருமையாக நோக்கத்தக்க விஷயங்களாம். "சுராசுரர் முனிவர் நரர் கையில் பாரில் சுடர்வானில் பகலிரவில் உள்புறம்பில், பெருபடைவில் தான் சாகா விரணியன்றன்னைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்ற தூணில், நரகரியாய்ப் பொழுது புகுநேரந்தன்னில் நாடியுதித்துயர் வாசற்படி மீதேறி, இரணியனைத் தொடைமிசை வைத்துகிரினாலே இருபிளவாக்கினையரியே பெம்பிரானே!" என்றார் பின்னோரும்.

## 14. உருப்பசி,

அண்ணங்கராசார், ஸ்ரீசடகோபராமானுஜார் எழுதியிருப்பதை பெரு மாள் திருமொழியில் 56-வதுபக்கத்தில் அப்படியே எழுதியிருக்கிறார்.

அண்ணங்காராசாரியார்.

உருப்பசி - ஊர்வஸீ என்ற வடசொல்லின் சிதைவு; அப்பெயர் - தொடையினின்று பிறந்தவள் என்று பொருள்படும்; ஊரு - தொடை. குருசிஷ்யக்கிரமத்தை உலகத்தார்க்கு உணர்த்துதற்பொருட்டு விஷ்ணுவின் அம்சமாய்க்குருவும் சிஷ்யனுமாய்த்திருவவதரித்த நாரா யணன் நரன் என்ற முனிவர்கள் பதரிகாச்சிரமத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கையில் இந்திரனுடைய ஏவலால் அப்ஸரஸ்திரீகள்பலர் அங்கு வந்து தங்களுடைய மேனி மினுக்கினாலும் ஆடல் பாடலாதி விநோதங்களாலும் அவர்களுடைய தபஸ்ஸுக்கு இடையூறு செய்யத் தொடங்க அதனாற் சிறிதுங்கலங்காத அவர்களுள் நாராயணமுனிவர் அம்மகளிரை அவமானப்படுத்தக்கருதித் தமது தொடையினின்று ஒரு கட்டழகியை ஸங்கல்பத்தாலுண்டாக்க, அவளது ஒப்புயர்வற்ற அழகை நோக்கி அத்தேவமாதர்கள் மிக வெள்கி அவளையே தங்கட்குத் தலைவியாகக் கொண்டு அவளுடன் தமது உலகத்துக்குச் சென்றனரென்பது வரலாறு; அவளே ஊர்வசி.

## 15. பஞ்சகாலபராயணர்.

இவ் விஷயமாய், வை. மு. ஸ்ரீ சடகோப ராமாநுஜாசாரியர் பட்டர் வைபவம் என்னும் நூலில் 3, 4, வது பக்கங்களில் எழுதியிருக்கிறார். (பட்டர் வைபவம் என்னும் நூல் பாரபவ வருஷத்தில் அச்சிடப்பட்டது.)

### சடகோபராமாநுஜாசாரியார்.

ஒரு தினத்தின் பகற்பொழுதைப் பிராதக்காலம் ஸங்கவகாலம் மத்யாஹ்நகாலம் அபராஹ்நகாலம் ஸாயங்காலம் என்று ஐந்தாகப் பகுத்து சூரியோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியனவென வரையறுத்து, அபிகமநம் உபாதாநம் இஜ்யா ஸ்வாத்யாயம் யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே அந்த ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்கவேண்டுவதும் யோகாநுஷ்டானமே. இவற்றின் விவரம் வருமாறு:— முதலாறு நாழிகையாகிய பிராதக்காலத்திலே, ஸ்நாநம் ஸந்த்யாவந்தனம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் வழிபடுகடவுளின் சந்நிதிக்குச் சென்று ப்ரதக்ஷிண நமஸ்காரங்களால் எம்பெருமானை உகப்பிக்க வேண்டும்; இது, அபிகமநகாலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவகாலத்திலே பகவதாராதநத்துக்கு வேண்டிய சுத்ததீர்த்தம் சந்தனம் புஷ்பம் தூபதீப திரவ்யங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுது செய்வித்தற்கு வேண்டிய அரிசி பருப்பு கரியமுது சர்க்கரை நெய் தயிர் பழம் முதலிய போஜநோபகரணங்களையும் சம்பாதித்துத் தொகுத்துச் சித்தஞ்செய்யவேண்டும்; இது, உபாதாநகாலநியமம். மூன்றாவதான மத்தியான்ன காலத்திலே, மாத்யான்னிகஸ்நாநமும் மாத்தியான்னிகச்சடங்குஞ் செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதநம் பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுதுசெய்வித்து, அங்ஙனம் நிவேதித்த உணவுகளை விருந்தினரோடும் பந்துமித்திரர்களோடும் புசிக்க வேண்டும்; இது, இஜ்யாகாலநியமம். அதற்கு அடுத்ததான அபரான்னகாலத்திலே, வீடுபேற்றுக்கு உரிய வேத வேதாங்கங்களையும் இதிகாச புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் கற்றலும் கற்பித்தலும் வேண்டும்; இது, ஸ்வாத்யாயகாலநியமம். ஈற்றதான ஸாயங்காலத்திலே, மாலைக்கடனாகிய ஸந்தியாவந்தனத்தைச் செய்யத்தொடங்கிச் சூரியாஸ்தமநமானபின்பு ஜபத்தைப் பூர்த்தி செய்து இராத்திரி போஜநாநந்தரம் ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளையடக்கிப் பிராணாயாமம் செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே லயப்படுத்திப் பகவத்தியாநத்தோடு படுத்து உறங்கவேண்டும்; இது, யோககாலநியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர் 'பஞ்சகாலபராயணர்' எனப்படுவர்.

# 15. பஞ்சகாலபராயணர்.

அண்ணங்கராசாரியார் ஸ்ரீ சடகோபராமாநுஜாசார் ஸ்வாமி எழுதியிருப்பதையப்படியே கையாண்டு பெருமாள் திருமொழியில் 21-வது பக்கத்தில் எழுதியிருப்பதைக் கீழேகாட்டுவோம்.

## அண்ணங்கராசாரியார்.

ஒரு தினத்தின் பகற்பொழுதை ப்ராத : காலம், ஸாயங்காலம், மத்யாஹ்ந காலம். அபராஹ்ந காலம், ஸாயங்காலம் எனறு ஐந்தாகப் பகுத்து, ஸூர்யோதயம் முதல் அவ்வாறு நாழிகை இவற்றிற்கு முறையே உரியவை என்று வரையறுத்து அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து ஒழுக்கங்களையும் முறையே அந்த (ப்ராத : காலம் முதலிய) ஐந்து சிறுபொழுதிலும் அநுஷ்டிக்கும்படி பாஞ்சராத்திரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்கவேண்டுவதும் யோகாநுஷ்டாநமே; இவற்றின் விவரம் வருமாறு:— முதலாறு நாழிகையாகிய ப்ராத : காலத்திலே ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் ஜபம் முதலிய காலக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் ஆராதிக்கவேண்டிய எம்பெருமானுடைய ஸந்நிதியிற் சென்று ப்ரதக்ஷிண நமஸ்கார்ஸ்தோத்ரம் முதலியவற்றால் எம்பெருமானை உகப்பிக்கவேண்டும்: இஃது அபிகமந காலநியமம். அதற்கு அடுத்த ஸங்கவகாலத்திலே பகவதாராதனத்துக்கு வேண்டிய சுத்த தீர்த்தம் சந்தனம் புஷ்பம் தூபதீப த்ரவ்யங்கள் முதலியவற்றையும் திருமஞ்சனத்துக்கு வேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுது செய்விப்பதற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் தயிர் பழம்முதலிய போஜநோபகரணங்களையும் ஸம்பாதித்துத் தொகுத்து வித்தஞ்செய்யவேண்டும்: இஃது உபாதாநகாலநியமம். மூன்றாவதான மத்யாஹ்ந காலத்திலே, மாத்யாஹ்நிகஸ்நாநமும் மாத்யாஹ்நிகச்சடங்கும் செய்து விதிமுறை வழுவாது பகவானுக்குத் திருவாராதநம்பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுதுசெய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை அதிதிகளோடும் பந்துமித்திரர்களோடும் புஜிக்கவேண்டும்: இஃது இஜ்யாகால நியமம். அதற்கு அடுத்ததான அபராஹ்நகாலத்திலே மோக்ஷமார்க்கத்துக்கு உரிய வேத வேதாந்த வேதாங்கங்களையும் இதிஹாஸ புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் தாம் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும் வேண்டும்: இது ஸ்வாத்யாய காலநியமம். ஈற்றதான ஸாயங்காலத்திலே மாலைக்கடனாகிய ஸந்த்யாவந்தனத்தைச் செய்யத்தொடங்கி ஸூர்யாஸ்தமனமானபின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இரவு போஜநாநந்தரம் ஏகாந்தமாக இருந்து ஐம்பொறிகளையடக்கி ப்ராணாயாமஞ் செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே நிலைநிறுத்தி பகவத் குணாநுஸந்தானத்தோடு பள்ளிகொள்ளவேண்டும்: இது யோககால நியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர் பஞ்சகாலபராயணர் எனப்படுவர்.

## 16. ஆண்டாள் சூடிக்கொடுத்தமாலையை அணிந்த வரலாறு,

இவ்வரலாற்றை ஸ்ரீ சடகோபராமானுஜாசார் அஷ்ட பிரபந்தத்தில டங்கிய புராணகதைகள் என்ற பாகத்தில் 21.வது பக்கத்தில் எழுதி யிருக்கிறார்.

சடகோபராமாநுஜாசாரியார்.

அம்மங்கை இளமை தொடங்கி எம்பெருமானிடத்திலே பக்திப் பெருங்காதல் கொண்டு அப்பெருமானையேதான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, தனது தந்தையார் அவ் வில்லிபுத்தூரில் வாழும் எப்பெருமானுக்குச் சாத்தும் பொருட்டுக் கட்டிவைத்த திரு மாலையை அவரில்லாத சமயம் பார்த்து எடுத்துத் தான் கூந்தலில் தரித்துக்கொண்டு, 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ?' என்று தன் செயற்கையழகைக் கண்ணுடியிலே கண்டு, தந்தையார் வருவதற்கு முன் அம் மலர்மாலையைக் களைந்து, முன்போலவே நலங்காமல் வைத்து வந்தாள்; இச் செய்தியை யுணராமல் ஆழ்வார் அம் மாலையைக்கொண்டு போய்ச் சுவாமிக்குச் சாத்திவர, பெருமானும் ப்ரிதியோடு எற்றருளினான்; இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்தபொழுது, பூமாலையைத் தமது மகள் சூடியிருப்பதைப் பார்த்து, கோபித்து அவளைக் கண்டித்துப் புத்தி சொல்லிவிட்டு அன்று எம்பெருமானுக்கு மாலை சாத்தாமல் நின்றார். அன்றையிரவில் திருமால் ஆழ்வாரது கனவில்தோன்றி 'சூடிக்கொடுத்த மாலையே நமது உள்ளத்திற்கு மிகவும் உகப்பாவது' என்று அருளிச் செய்ய, அதனால், ஆழ்வார் தம் மகளைத் திருமகளென்றே கருதி, யாவர்க்குந் தலைவியென்ற காரணத்தால் 'ஆண்டாள்' என்றும், மலர் மாலையைத் தான் சூடிக்கொண்ட பின்புபெருமானுக்குக் கொடுத்ததனால் 'சூடிக்கொடுத்தாள்' என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

## 17. சகடுதைத்த கதை.

நந்தகோபகிருகத்தில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணன், ஒருகால் அச்சகடத்திற் கம்சனால் ஏவப்பட்ட அசுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலே விழுந்து தன்னைக்கொல்ல முயன்றதை யறிந்து பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலேதூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடுசிதைப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுரனுள்பட அழிந்ததென்பதாம். (ஸ்ரீ சடகோப ராமாநுஜாசார்)

## 16. சூடிக்கொடுத்த நாச்சியார்.

அண்ணங்கராசார் ஸ்ரீ சடகோபராமாநுஜாசார் ஸ்வாமி எழுதியிருப்பதை அப்படியே கையாண்டு நாய்ச்சியார் திருமொழி தனியனுரையில் (4-பக்கம்) வரைந்திருப்பதைக் காண்க.

ஆண்டாள் இளமை தொடங்கி எம்பெருமானிடத்திலே பக்திப் பெருங்காதல்கொண்டு அப்பெருமானையேதான் மணஞ்செய்துகொள்ளக்கருதி, தனது தந்தையரான பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தும் பொருட்டுக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத ஸமயம்பார்த்து எடுத்துத் தன்கூந்தலில் தரித்துக்கொண்டு 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனோ இல்லையோ' என்று தன் செயற்கையழகைக் கண்ணாடியிலே கண்டு, தந்தையார் வருவதற்கு முன் அம் மலர்மாலையைக் களைந்து முன்போலவே நலங்காமல் வைத்துவந்தாள்; இச்செய்தியை உணராமல் ஆழ்வார் அம் மாலையைக் கொண்டுபோய் ஸ்வாமிக்குச் சாத்திவர, பெருமானும் ப்ரீதியோடு ஏற்றருளினன்; இங்ஙனம் பலநாள் கழிந்தபின்பு ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்தபொழுது பூமாலையைத் தமது மகள் சூடியிருப்பதைப் பார்த்து, கோபித்து அவளைக் கண்டித்துப் புத்தி சொல்லிவிட்டு, அன்று எம்பெருமானுக்கு மாலைசாத்தாமல் நின்றார்; அன்றையிரவில் திருமால் ஆழ்வாரது கனவில் தோன்றி உமது மகள் சூடிக்கொடுத்த மாலையே நமது உள்ளத்திற்கு மிகவும் உகப்பாவது' என்று அருளிச்செய்ய, அதனால் ஆழ்வார் தம் மகளைத் திருமகளென்றே கருதி, யாவர்க்குந்தலைவியென்ற காரணத்தால்'ஆண்டாள்' என்றும், மலர்மாலையைத் தான் சூடிக்கொண்ட பின்பு பெருமானுக்குக் கொடுத்ததனால் 'சூடிக்கொடுத்தாள்' என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தனரென்பதாம்.

## 17. சகடமுதைத்த வரலாறு.

நந்தகோபர் திருமாளிகையில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன், ஒருகால் அச் சகடத்திற்கஞ்சனால் ஏவப்பட்ட அசுரனொருவன் வந்து ஆவேசித்துத் தன் மேலே விழுந்து தன்னைக்கொல்ல முயன்றமையை அறிந்து பாலுக்காக ...கிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலேதூக்கி உதைத்... அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே ... அசுரனுட்பட அழிந்ததென்பதாம். (அண்ணங்கராசாரியார்)

அண்ணங்கராசாரியார் சகடமுதைத்த வரலாற்றை திருப்பாவை யினுரையில் 55-வது பக்கத்தில் -கள்ளச் சகடங்கலக்கழியக்காலோச் சின வாலாறு- என்றும், 137-வது பக்கத்தில் -சகடமுதைத்தவாலாறு- என்றும், பெரியாழ்வார் திருமொழியின் புதிப்புரையின் 22-வது பக் கத்தில் -சகடனேச்சாடியது. இதன் விவரம் வருமாறு- என்றும் மூன்று இடங்களில் எழுதியிருக்கிறார்.

---

ஸ்ரீ-உப-வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்ஸ்வாமிமுதலானேரின் அமுதமொழிகளையும், அவற்றிலுள்ள கமா, கோடேஷன் முதலான ஒன் றையும் பெரும்பாலும் விடாமல் அம்மொழிகளை அப்படியே கையாண்டு எழுதிய அண்ணங்கராசாரியாரின் வாக்கியங்களையும் இம்மாதிரி எடுத்து எழுதுவதானுல் மிக மிக விரிந்துவிடும். ஆதலால் இனி அங்ஙனம் செய்யாமல், இவ்விவ்விடங்களிலிருந்து இவ்விவை எழுதப்பட்டிருக் கின்றன எனச்சிலவே குறிப்பிடுவோம்.

## 18. ஆழ்வார்கள் வைபவம்.

ஸ்ரீஉப.வெ. வை-மு. சடகோபராமாநுஜாசார் ஸ்வாமி இற்றைக்கு முப்பத்தைந்து வருஷத்திற்கு முன் ஏவிளம்பி வருஷத்தில் "ஆழ்வார் கள் சரித்திரம்" என்ற ஓர் நூல் அச்சிட்டிருக்கிறார்.

அண்ணங்கராசாரியார், அந்நூலின் வழியைப் பின்பற்றி பெரும் பான்மையானவிடங்களில் அந்நூலிலுள்ள வாக்கியங்களை அப்படியே யெழுதியும், சிற்சிலவிடங்களில் பர்யாய (ஒரே பொருளுள்ள) பதங் களைச் சேர்த்தும், (1) ஆண்டாள் வைபவம் (2) குலசேகராழ்வார் வை பவம் (3) திருமழிசைப்பிரான் வைபவம் (4) தொண்டரடிப்பொடி யாழ்வார் வைபவம் (5) திருப்பாணுழ்வார் வைபவம் (6) மதுரகவியாழ் வார் வைபவம், (7) முதலாழ்வார்கள் வைபவம் — இவைகளை வெளி யிட்டிருக்கிறார்.

## 19. திருவிருத்தம்.

ஸ்ரீ.வை.மு. சடகோப ராமாநுஜாசாரியார்ஸ்வாமி, முப்பத்திரண்டு வருஷத்திற்கு முன்பு விகாரி வருஷத்தில் திருவிருத்தத்திற்கு ஓர் உரை இயற்றி அச்சிட்டிருக்கிறார்.

அண்ணங்காசாரியார் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன்கூடிய திருவிருத்தம், 1930 வருஷத்தில் M. R. கோவிந்தஸாமி நாயுடு அ[illegible] களால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ சடகோபராமாநுஜாசார்ஸ்வாமியின் திருவிருத்த உரையையே எதிரில்முன்பில் வைத்துக்கொண்டு அப்படியே கையாண்டு எழுதியிருக்கிறார் என்பதை இரண்டு உரையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் யாவரும் எளிதில் அறியலாம். ஆனால் சிற்சிலவிடங்களில் ஒரே பொருளுள்ள வேறு பதங்களை வைத்தும் வாக்கியங்களை முன்பின்னாக எழுதியுமிருக்கிறார். இவ் விஷயத்தைப்பற்றி மேல் ஸஞ்சிகையில் விரிவாய் விமர்சிக்கப்படும்.

## 20. யாப்பிலக்கணச் சுருக்கம்.

அண்ணங்கராசாரியார் 1914-ஆம் வருஷத்தில் வெளியிட்ட பெரியாழ்வார் திருமொழியின் உரையின் கடைசியில் (428-வது பக்கம்) உரைகாரர் விண்ணப்பத்தின் கீழ் ''யாப்பிலக்கணச் சுருக்கம்'' ஒன்று 428, முதல் 432வது பக்கம் வரை(5பக்கம்)எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ சடகோப ராமாநுஜாசாரியாராலும், ஸ்ரீ சே. கிருஷ்ணமாசாரியாராலும் 1903-வது வருஷம் வெளியிடப்பட்ட நன்னூல்காண்டிகையுரையின் இறுதியிலும், மற்றும் நோட்ஸுகளிலும் யாப்பிலக்கணச் சுருக்கம் எழுதப்பட்டிருக்கிறது. இதையே எடுத்து பெரியாழ்வார் திருமொழியின் முடிவில் அண்ணங்கராசாரியார் அப்படியே யெழுதினாரென்பது இரண்டையும் நோக்கினால் நன்கு விளங்கும். உதாரணமாகச் சிலவற்றைக் காட்டுவோம்.

சடகோபராமாநுஜாசார்.

வெண்பாவாவது—ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விள்ச்சீர்களும் இருவகை * வெண்டளைகளுங் கொண்டு, மற்றைச்சீருந்தளையும் பெறாமல், நாள் மலர் என்ற ஓரசை வாய்ப்பாடுகளுள் ஒன்றினாலாவது,காசு பிறப்பு என்ற உகரவீற்று ஈரசை வாய்பாடுகளுள் ஒன்றினாலாவது முடிந்து,ஒருவிகற்பத்தாலாயினும் இருவிகற்பத்தாலாயினும் வருவது. [ஒருவிகற்பமாவது - பல அடிகள் ஓர் எதுகையாய் வருவது; இருவிகற்பமாவது - அவ்வடிகள் இருவகை எதுகையாய் அமைவது.]

அண்ணங்காசாரியார்.

வெண்பாவாவது—ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விளச்சீர்களும் இருவகை * வெண்டளைகளுங் கொண்டு, மற்றைச்சீருந்தளையும் பெறாமல், நாள் மலர் என்ற வாய்ப்பாடுகளுள் ஒன்றினாலாவது, காசு பிறப்பு என்ற உகரவீற்று வாய்ப்பாடுகளுள் ஒன்றினாலாவது முடிந்து, ஒரு விகற்பத்தாலாயினும் இரு விகற்பத்தாலாயினும் வருவது. [ஒருவிகற்பமாவது - பல அடிகள் ஓர் எதுகையாய் வருவது; இரு விகற்பமாவது - அவ்வடிகள் இரு வகை எதுகையாய் அமைவது.]

170039
600 005

சடகோபராமாநுஜாசார்

குற்றியலிகரம் குற்றியலுகரம் அளபெடை என்பவை, இடத்துக்கு எற்ப அலகுபெறுமலும் நிற்கும். ஆய்தவெழுத்து-சிலவிடத்து உயிராகவும் சிலவிடத்து மெய்யாகவும் இடத்துக்குஎற்பக் கருதப்படும். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் இடத்துக்கு எற்பக் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடப்படும். சிறுபான்மை மெய்யெழுத்துக்களை யொழித்து அலகிடுதலும் உண்டு. அளபெடைகள், மாத்திரைக்கு எற்ப அலகுபெறும்.

மற்றவை சிறுபான்மையன. அவற்றின் இலக்கணங்களை யெல்லாம் தொல்காப்பியம், இலக்கண விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் முதலிய பரந்த நூல்களிற் கண்டுகொள்க.

அண்ணங்கராசாரியார்

குற்றியலிகரம் குற்றியலுகரம் அளபெடை என்பவை, இடத்துக்கு எற்ப அலகுபெறுமலும் நிற்கும். ஆய்தவெழுத்து-சிலவிடத்து உயிராகவும் சிலவிடத்து மெய்யாகவும் இடத்துக்கு எற்பக் கருதப்படும். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் இடத்துக்கு எற்பக் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடப்படும். சிறு பான்மை மெய்யெழுத்துக்களை யொழித்து அலகிடுதலும் உண்டு. அளபெடைகள், மாத்திரைக்கு எற்ப அலகிடப்படும்.

மற்றவை சிறுபான்மையன. அவற்றின் இலக்கணங்களை யெல்லாம் தொல்காப்பியம், இலக்கண விளக்கம், யாப்பருங் காரிகை,யாப்பருங்கலம் முதலிய பரந்தநூல்களிற் கண்டுகொள்க.

## புராண கதைகள்.

அண்ணங்கராசாரியார் முகவுரையில் "மிதமறச் சொல் மூலத்திற் கதைகள் தன்னைப் புராணவழி கண்டெடுத்து விரியச்சொல்வேன்" என்றும், "முக்கியமான புராணவரலாறுகளையும்........விவரித்து வருமாறு முயன்றிருக்கிறேன்" என்றும் கூறியபடி திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில் பலவிடங்களில் பல கதைகளை விவரித்து எழுதியிருக்கிறார். பெருமாள் திருமொழியினுரையின் முடிவில் ஸ்ரீ கிருஷ்ணாவதார கதைகளைச் சுருக்கி "ஸ்ரீ கிருஷ்ணாவதார வைபவஸங்க்ரஹம்" என்று 15 பக்கமும் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதிய புராண வரலாறுகளெல்லாம் ஸ்ரீ உப. வே. வை. மு. சடகோபராமானுஜாசாரியரும். ஸ்ரீ உப. வே சே. கிருஷ் மாசாரியாரும், ஸ்ரீ உப. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய ரும் இயற்றிய விரிவான உரையுடன்கூடிய அஷ்டபிரபந்தத்தின் கடை சியிலுள்ள "புராணகதைள்" என்ற பாகத்திலிருந்தும், அஷ்டப்பிரப தத்தின் உரையிலிருந்தும், அவர்களது மற்றைய நூல்களிலிருந்தும் கையாண்டு எழுதியது என்பதை இதன் மேல் ஸஞ்சிகைகளில் விரிவாய் வெளியிட விரும்புகிறோம்.

Prined at Sri Komalamba Press, Kumbakonam.

விலாஸம்:—

மானேஜர்,

ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தகசாலை.

16, பாட்டராசாரியார் தெரு,

கும்பகோணம்.